இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 27.02.2026

# நல்லகண்ணுக்கு செவ்வணக்கம்!



தியாகத்தின் அடையாளமாய் - கொள்கையில் இமயமாய் - வாழ்வின் தனிச்சிறப்பாய் - பொதுவாழ்வுக்கு இலக்கணமாய் வாழ்ந்த தோழர் நல்லகண்ணு அவர்கள் 101 ஆவது வயதில் நம்மிடம் இருந்து விடைபெற்றுள்ளார். அவருக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ‘தகைசால் தமிழர் விருது’ வழங்கிச் சிறப்பித்தார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். 101 வயதைத் தாண்டி பெருந்தகை சால் தமிழராக விடைபெற்றுள்ளார் தோழர் நல்லகண்ணு.

தனது அரசியல் வாழ்க்கையின் தொடக்கத்தை இப்படிச் சொல்கிறார் நல்லகண்ணு...

**“‘பாட்டி! உங்களுக்கு எவ்வளவு வயல் இருக்கு?’ என்று மூதாட்டி ஒருவரிடம் கேட்டேன். ‘வயிறுதான் இருக்கு பேராண்டி’ என்று பதில் சொன்னார். வறட்சியும் வறுமையும் கலந்த இந்த வாழ்க்கை கம்யூனிஸ்ட் கட்சிக் கொடியை என் கையில் கொண்டுவந்து திணித்தது.”**

12 வயதில் இருந்து போராட்டக்காரனாக உருவானவர் தோழர் நல்லகண்ணு. 15 வயதில் பொதுவுடமைக் கொள்கைகளால் ஈர்க்கப்படுகிறார். 18 வயதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் தன்னை இணைத்துக் கொள்கிறார். 101 வயது வரை பொதுவுடமைக் கொள்கைக்காகவே பொது உரிமையின் அடையாளமாக வாழ்ந்து மறைந்துள்ளார் தோழர்.

இந்தியாவின் ஆட்சியைக் கவிழ்த்து கம்யூனிஸ்ட் அரசாங்கத்தை நிறுவ முயற்சிப்பதாக 1948 காலக்கட்டத்தில் பல்வேறு ஊர்களில் கம்யூனிஸ்ட் தோழர்கள் கைது செய்யப்பட்டார்கள். பலரும் தலைமறைவு ஆனார்கள். கைது செய்யப்பட்ட தோழர்களில் ஒருவர் நல்லகண்ணு.

**இரண்டு ஆண்டு காலம் தலைமறைவில் இருந்த தோழர் நல்லகண்ணு 1949 டிசம்பர் 20 அன்று கைது செய்யப்பட்டார். எந்தப் பண்ணையார்களை எதிர்த்து நீதி கேட்டாரோ அந்தப் பண்ணையார்கள் முன்பாகவே அடித்து சித்திரவதை செய்யப்பட்டார். கையும் காலும் கட்டப்பட்டு முச்சந்தியில் போட்டு அடித்தார்கள். அவரது மீசையை சிகரெட் நெருப்பால் சுட்டார்கள். மலை உச்சிக்கு தூக்கிச் சென்று, ‘இதில் இருந்துதான் பலரையும் தூக்கிப் போட்டேன், இப்போது உன்னையும் போடப் போகிறேன்’ என்றார் போலீஸ்காரர். அப்போதும் வாயைத் திறக்காமல் நெஞ்சுரத்தோடு இருந்தவர்தான் நல்லகண்ணு.**

**“ஆயுள் தண்டனையும் அதன்மேல் தண்டனையும்**
**பேய்ச்சட்டம் அளித்திட பெரும்பங்கு எங்களுக்கு**
**ஆண்டு பலவாக அடக்கியே போட்டாலும்**
**மாட்டிச் சிறைக்குள்ளே மக்கிப் போட்டாலும்**
**மக்கள் சக்தியின் மேல் மாறாத நம்பிக்கை**
**எந்நாளும் கொண்டுள்ளோம் எதற்கும் அஞ்சவில்லை”** – என்று எழுதியது மட்டுமல்ல;

எந்நாளும் அஞ்சாமல் வாழ்ந்து வருபவர் அய்யா அவர்கள்.

ஏழு ஆண்டுகள் சிறைச் சாலையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருந்து வெளியில் வந்த பிறகும், முன்னிலும் உரம் பெற்று உழைத்தார். சுதந்திர இந்தியாவில் பொதுவுடமைத் தத்துவம் தமிழ்நாட்டில் வளர உழைத்ததில் தோழர் நல்லகண்ணுவின் பங்கு பெரும்பங்கு ஆகும்.

பொதுவுடமை - சமூகநீதி - சாதி ஒழிப்பு - மதவாத எதிர்ப்பு - தேசிய இனப்பிரச்சினை - தமிழுக்குச் சிறப்பு - தமிழின மேம்பாடு - ஆகிய அனைத்துக்கும் சரிசமமான முக்கியத்துவம் கொடுத்து உழைத்தவர் தோழர் நல்லகண்ணு.

**“அய்யா வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என்பதுதான் நமக்குப் பெருமை” என்று முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். “வயதால் எனக்குத் தம்பி - அனுபவத்தால் எனக்கு அண்ணன்’ என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ‘என்னை விட வயதால் இளையவர், அனுபவத்தாலும் தியாகத்தாலும் நம்மையெல்லாம் விட மூத்தவர்’ என்றார் தலைவர் கலைஞர்.**

**தலைவர் கலைஞர் அவர்களுக்கு ஆரம்ப காலத்தில் விபத்தில் ஒரு கண் பழுது பட்டது. அதைக் குறிப்பிட்ட தலைவர் அவர்கள் – ‘எனக்கு ஒரு கண் தான் முகத்தில் இருக்கிறது. இன்னொன்று அகத்திலே இருக்கிறது. அது நல்லக் கண்’ என்று குறிப்பிட்டார்கள். அந்தளவுக்கு மதிப்புமிகு தலைவராகப் போற்றப்பட்டார்.**

தோழர் நல்லகண்ணு அவர்களுக்கு அண்ணல் அம்பேத்கர் விருதை வழங்கினார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். அண்ணல் அம்பேத்கர் விருதைத் தரும் போது, தமிழ்நாடு அரசால் ஒரு லட்சம் ரூபாய் அய்யாவுக்கு வழங்கப்பட்டது. அதில் ரூ.ஐம்பதாயிரத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் – ரூ.ஐம்பது ஆயிரத்தை விவசாய சங்கத்துக்கும் கொடுத்தவர் நல்லகண்ணு அவர்கள். இன்றைய முதலமைச்சர் அவர்கள் தகை சால் தமிழர் விருது வழங்கிய போது அரசின் சார்பில் ரூ.பத்து லட்சம் தரப்பட்டது.

அதில் 5 ஆயிரம் ரூபாயைச் சேர்த்து பத்து லட்சத்து 5 ஆயிரம் ரூபாயை தமிழ்நாடு அரசுக்கே நிவாரண நிதியாகத் திருப்பி அளித்தார் நல்லகண்ணு.


80 ஆவது பிறந்த நாளின் போது ஒரு கோடி ரூபாயைத் திரட்டித் தந்தனர் அன்றைய இந்தியக் கம்யூனிஸ்ட் செயலாளர் தா.பாண்டியன் அவர்களும் பொருளாளர் எம்.எஸ். தாவீத் அவர்களும். அந்த ஒரு கோடி ரூபாயையும் மேடையிலேயே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கே கொடுத்தவர்தான் அய்யா நல்லகண்ணு அவர்கள்.

**இந்தியாவின் புகழ்பெற்ற பத்திரிகையாளர் சாய்நாத், தோழர் நல்லகண்ணுவிடம் சில ஆண்டுகளுக்கு முன் ஒரு கேள்வியைக் கேட்டார். “உங்கள் வாழ்க்கையில் சோர்வே ஏற்படவில்லையா?” என்று!**


**‘‘நாங்கள் எச்சரிக்கைகள், மிரட்டல்கள் தாண்டி எழுந்து நின்றோம். அதனால்தான் நாங்கள் இன்றும் இங்கிருக்கிறோம்” என்றார் நல்லகண்ணு.**

‘‘வெற்றி என்பது ஓர் இயக்கத்துக்கு, இலட்சியத்துக்கு, கட்சிக்கு இறுதி நிகழ்ச்சியல்ல. முந்திய தலைமுறை விட்ட இடத்திலிருந்து புதிய தலைமுறை தொடர்ந்து இயங்க வேண்டும்” என்றார் நல்லகண்ணு. அவரது செம்மாந்த உடல் வைக்கப்பட்ட பாலன் இல்லத்துக்கு மூத்த தலைமுறை முதல் இளைஞர்கள் வரை மட்டுமல்ல; சிறுவர் சிறுமியரும் வந்து அஞ்சலி செலுத்தினார்கள். நல்ல விதைகளையே விதைத்துச் சென்றுள்ளார் தோழர்.

**‘எனது வாழ்க்கைதான் நான் விடுக்கும் செய்தி’ என்று சொன்னார் அண்ணல் காந்தி. அப்படிச் சொல்ல முழுத் தகுதி படைத்தவராகவும் வாழ்ந்து மறைந்துள்ள தோழர் நல்லகண்ணுக்கு செவ்வணக்கம்.**




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (26.02.2026) தலைமைச் செயலகத்தில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை தாலுகா, ரெட்டியார்பட்டி கிராமத்தில், ரூ.39.06 கோடி மதிப்பீட்டிலும், விருதுநகர் மாவட்டம், விருதுநகர் தாலுகா, கூரைக்குண்டு கிராமத்தில் ரூ.38.72 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் ஈரோடு மாவட்டம், ஈரோடு தாலுகா, கங்காபுரம் கிராமத்தில் ரூ.39.87 கோடி மதிப்பீட்டிலும், என மூன்று டைடல் நியோ பூங்காக்கள் அமைப்பதற்கு காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.02.2026) தலைமைச் செயலகத்தில் நீர்வளத்துறை சார்பில் வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம், கோயில்மலையாற்றின் குறுக்கே 176.02 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறிய அணை அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், இராணிப்பேட்டை மாவட்டத்தில் 200.66 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட பாலாறு அணைக்கட்டு மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில் 120.23 கோடி ரூபாய் செலவில் மதுராந்தகம் ஏரியை ஆழப்படுத்தி கொள்ளளவினை உயர்த்திடும் வகையில் நிறைவேற்றப் பட்டுள்ள மறுகட்டுமானங்களைத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் எ.வ.வேலு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கடலூரில் ரூ.98.26 கோடியில் அஞ்சலை அம்மாள் அறிவுலகக் கட்டடம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

சென்னை, பிப். 27 –

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.02.2026) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் 35 மாவட்டங்களில், 217 அரசுப் பள்ளிகளில் 296.62 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1232 வகுப்பறைக் கட்டடங்கள், 9 ஆய்வகக் கட்டடங்கள், 24 குடிநீர் வசதிகள், 60 கழிவறைகள் மற்றும் 500 மீட்டர் சுற்றுச்சுவர், பொது நூலக இயக்ககம் சார்பில் 5.65 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இராணிப்பேட்டை மைய நூலகம் மற்றும் அலுவலகக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்து, கடலூரில் 98.26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள அஞ்சலை அம்மாள் அறிவுலக கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

**அரசுப் பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் இதர கட்டடங்களை திறந்து வைத்தல்**

நபார்டு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாநிலத்தின் 35 மாவட்டங்களில், அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் என மொத்தம் 217 அரசுப் பள்ளிகளில் 296 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1,232 வகுப்பறைக் கட்டடங்கள்,

9 ஆய்வகக் கட்டடங்கள், 24 குடிநீர் வசதிகள், 60 கழிவறைகள் மற்றும் 500 மீட்டர் சுற்றுச்சுவர் ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**பொது நூலக இயக்ககம் சார்பில் முடிவுற்ற பணியினை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்**

பொது நூலக இயக்ககம் சார்பில் 5 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் கட்டப்பட்டுள்ள இராணிப்பேட்டை மாவட்ட மைய நூலகம் மற்றும் அலுவலகக் கட்டடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

பொது நூலக இயக்ககம் சார்பில் கடலூர் மாவட்டம், கடலூரில் 98 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தரை மற்றும் நான்கு தளங்களுடன் கட்டப்படவுள்ள அஞ்சலை அம்மாள் அறிவுலக கட்டடத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பள்ளிக்கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் பி. சந்திரமோகன், பொது நூலக இயக்குநர் (மு.கூ.பொ.) திருமதி ச.ஜெயந்தி, பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச. கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ. நரேஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம், காட்டுமன்னார்கோயில், எம்.ஆர்.கே. அரங்கத்தில் நடைபெற்றது. வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.